## DEPOSITION OF WITNESS

### (Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

### Sessions Case No. 18 of 2023

| | |
|---|---|
| **Deposition of witness for** | **: PW1** |
| **Name** | **: Krishnan** |
| **Father's Name** | **: Venkatramakoundar** |
| **Village** | **: Velampatti** |
| **Taluk** | **: Pochampalli** |
| **Calling** | **: Farmer** |
| **Age** | **: 83** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of July 2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை:**

நான் வேலாம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் வேலாம்பட்டி 1 ஏக்கர் 40 செண்ட் கிரையம் வாங்கினேன். வெங்கடேசன் என்பவரிடம் நிலம் வாங்கினேன். மேற்படி வெங்கடேசன் ஆகிய நான் எனது நிலத்தின் வழியாகவும் பொது வழியாகவும் போகவும் வரவும் கிரைய சொத்திற்கு சம்பந்தப்பட்டது என எழுதிக்கொடுத்துள்ளார். அந்த வழியாக 6ம் தேதி 5 ஆம் மாதத்தில் எனது நிலத்தை பார்ப்பதற்காக சென்ற போது அப்போது அஜீத் என்பவர் பக்கத்து நிலத்தில் டிராக்டரில் ஏர் ஓட்டிக் கொண்டு இருந்தார் . 2 மணி நேரம் ஓட்டி விட்டு வருவதாக சொன்னார். அப்போது கருணாநிதி என்பவர் நிலத்தின் வழியாக டிராக்டரை ஓட்டி

சென்றால் பெட்ரோல் ஊற்றி வண்டியை எரித்து விடுவதாக சொன்னார். அதன் பின்னர் அஜீத் வரவில்லை என்று சொல்லிவிட்டார். மேற்படி 40 செண்டில் உள்ள எனது கிணற்றில் ஒரு ஆயில் என்ஜின் வைத்துள்ளேன். அது ரிப்பேர் ஆனது . அதற்காக மெக்கானிக் மாரியப்பன் முருகன் மற்றும் நான் ஆகியோர் அங்கு வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது எனது மகன் விஜயகுமார் நாங்கள் வேலை செய்வதை பார்ப்பதற்காக அந்த வழியாக வந்தார். வரும் வழியில் நீ இந்த வழியில் போக கூடாது என சொல்லி எதிரிகள் 6 பேரும் அடைகட்டி சண்டை வாங்கி உள்ளார்கள். நான் வேலை செய்து கொண்டிருந்தபோது எனது மகன் விஜயகுமாரின் கூச்சல் சத்தம் எங்களுக்கு கேட்டது. நான் ஓடிவரும்போது சுமார் 5 அடி தூரத்தில் மகனை நோக்கி வரும்போது கருணாநிதி என்பவர் கொடுவாலால் எனது மகனை தலை மற்றும் வலது கை இரண்டு வெட்டுக்கள் வெட்டினார் . இரத்தம் அதிகமாக போனது. அதன்பின்பு விஜயகுமார் அங்கேயே சாய்ந்து விட்டார். பின்பு எதிரிகள் 6 பேரும் அங்கிருந்த கல்லை எடுத்து விஜயகுமார் மீது போட்டும் காலால் எட்டி உதைத்தார்கள். மேற்படி 6 பேரும்சேர்ந்து எனது நிலத்தில் அமைத்திருந்த வேலி கற்களை உடைத்துவிட்டார்கள். அப்போது கருணாநிதி நீ உயிருடன் இருந்தால் தானே இந்த வழியாக வருவாய் என சொல்லி கொடுவாலால் விஜயகுமாரை வெட்டினார். எனது மருமகள் லட்சுமியும் நானும் எனது மகனை வண்டியில் காவேரிப்பட்டிணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் முடியாது என்று சொன்னதால் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எனது மருமகள் அழைத்து சென்றார். பின்பு பெங்களூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். என்னை பரிசோதனை செய்த காவேரிப்பட்டிண அரசு மருத்துவமனை மருத்துவர் என்னை வீட்டிற்கு செல்லலாம் என்று சொல்லிவிட்டார். பின்பு நான் வீட்டிற்கு வந்து விட்டு சுமார் இரவு 9.00 மணிக்கு நாகரசம்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் காவல் நிலையத்திற்கு கொடுத்ததாகும். அது அ.த.சா.ஆ.1 ஆகும். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள். எனது மற்றொரு மகன் பெயர் ராஜ்குமார். எனது மகள் பெயர் கவிதா. கவிதா எங்கள் ஊரில் இல்லை என்றால் சரிதான். 15 வருடமாக வழி சம்பந்தமாக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழி சம்பந்தமாக பல்வேறு பஞ்சாயத்து

பேசினோம் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை வழி பிரச்சனை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வழி பிரச்சனை சம்பந்தமாக இது வரை புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பலமுறை கொடுத்துள்ளேன். எதிரிகளும் மேற்படி அடிதடி சம்பந்தமாக வழக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் கொடுத்து இருப்பார்கள். எதிரிகளை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் அவர்கள் நிலம் வாங்கியதிலிருந்து தெரியும். 15 வருடங்களாக தெரியும். ஏர் ஓட்டக்கூடாது என கருணாநிதி என்னிடம் சொன்னாரா என்றால் என்னிடமும் சொன்னார், அஜீத்திடமும் சொன்னார். சம்பவம் நடந்தது 11 மணி இருந்து 12 மணி வரை இருக்கும். எதிரிகள் 6 பேரும் என்னை கல்லால் அடித்தார்களா என்றால் இல்லை. அவ்வாறு தான் போலீஸாரிடம் சொன்னேன். 6 பேரும் விஜயகுமாரை எந்த எந்த இடத்தில் அடித்தார்கள் என்றால் 83 வயது என்பதால் எனக்கு ஞாபகம் இல்லை. எந்த வகை கல் என்றால் கருங்கல் ஆகும். மேற்படி எதிரிகள் அடித்ததாக சொல்லும் கற்களை போலீஸாரிடம் கொடுத்தேனா என்றால் எனது மகன் இரத்த வெள்ளத்தில் இருந்ததால் மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முடிவெடுத்தேன். மேற்படி எதிரிகள் 6 பேரும் எவ்வளவு அளவு கற்களை வைத்திருந்தார்கள் என்றால் சுமார் 1 1/2 ,முதல் 2 கிலோ வரை இருக்கும் என கையை காட்டுகிறார். மேற்படி விவரத்தை நான் கொடுத்த புகாரிலும் போலீஸ் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன். யார் யார் எந்த காலில் எனது மகனை அடித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எனது மகனுக்கு கருணாநிதி வெட்டியதால் இரத்தம் வந்து சட்டை பேன்ட் நனைந்துவிட்டது. அது போலீஸாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இரத்தத்துடன் மருத்துவமனைக்கு சென்று விட்டார். கருணாநிதி பயன்படுத்தியதாக கூறும் கத்தியிலும் இரத்தம் இருந்தது. மேற்படி கத்தியை யார் போலீஸாரிடம் ஒப்படைத்தார்கள் என்றால் போலீஸாரிடம் எதிரி தான் ஒப்படைத்திருந்திருப்பார். எனது என்ஜினை ரிப்பேர் செய்த மெக்கானிக்கை எவ்வளவு நாளாக தெரியும் என்றால் ஒரு வருடம் தெரியும். 6 பேரும் என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. பொய் சொல்கிறார்கள். நாங்கள் தான் எதிரிகளை அடித்ததாக சொல்லி CC .NO. 1/24 வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். சண்டை நடந்த போது எத்தனை பேர்கள் பார்த்தார்கள் என்றால் தோராயமாக 10 பேர்கள் பார்த்திருப்பார்கள். சம்பவம் நடந்தது எனது நிலத்தில் தான் என்றால் சரிதான். எனது நிலத்தை சுற்றி கற்கள் நட்டு உள்ளேன் என்றால் சரிதான். எனது நிலத்திற்கு தெற்கு பக்கம் நட்டு உள்ளேன். அதில் 20 , 25 கற்கள் நட்டு உள்ளேன். மேற்படி கற்களை உடைத்தற்கான மதிப்பை சொன்னேனா என்றால்

இல்லை. எங்களுக்கும் எதிரிகளுக்கும் தள்ளுமுள்ளு ஏற்படும்போது எனது மகன் மேற்படி கல்லில் விழுந்துதான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு கல்லில் விழுந்ததால்தான் இரத்தம் வந்தது என்றாலும் கருணாநிதி கொடுவாலால் வெட்டவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையும் எனது மகனையும் கல்லாலும் காலாலும் அடிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வழி பிரச்சனையில் எதிரிகளை மிரட்டி பணியவைப்பதற்காக பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை பழி வாங்கும் எண்ணத்துடன் காவல்துறை உதவியோடு வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும் எனது மகன் மருமகள் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை அடித்துவிட்டு அதில் இருந்து தப்பிப்தற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.